★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஐப்பசி 2 முஹறு 1 இதழ் 248

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-10-82

வாடிக்கையாளருக்கு

முக்கிய அறிவித்தல்

யாழ் நகரில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக "பிற்றெக்ஸ்" ஸ்தாபனம்தற்போது 'ஹௌசியா' 9, பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மாற்றப் பட்டுள்ளது.

தொலைபேசி: 24199

பிற்றெக்ஸ் உரிமையாளர்.

4877

## நாளை நடக்கும் ஜனாதிபதி தேர்தல்:

# மாவட்ட அடிப்படையில் முடிவு அறிவிக்கப்படும்!

(கொழும்பு)

நாளை நடைபெறவிருக்கும் இலங்கைக் குடியரசின் முதலாவது ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள், மாவட்ட அடிப்படையில் நாளை மறு தினம் அறிவிக்கப்படும். இந்தத் தகவலை தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாக்குகள்எண்ணப்பட்டு அந்தந்த மாவட்டத்தில் எண்ணப்பட்ட முடிவுகள் கொழும்புக்குத் தெரிவிக்கப்பட்டு, அங்கிருந்து பொது மக்களுக்கு அறிவிக்கப்படும்.

வானொலி, ரூபவாஹினி தொலைக்காட்சிகள் மூலம் இம் முடிவுகள் வியாழக்கிழமை அதிகாலை 5 மணிக்கு அறிவிக்கப்படும் அநேகமாக அதிகாலை 5 மணிக்கும், 9 மணிக்குமிடையில் முடிவுகள் எல்லாம் கொழும்பு தலைமை அலுவலகம் வந்து சேர்ந்து விடுமென்றும், அந்த நேரத்துக்குள் சகல முடிவுகளும் அறிவிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளில் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவாரென்றும் தேர்தல் ஆணையாளர் கூறினார்.

எந்தவொரு வேட்பாளரும் அரைவாசிக்கும் கூடுதலான வாக்குகளைப் பெறுதவிடத்து முன்னுரிமை வாக்குகளை எண்ணுவதற்கு உத்தரவிடப்படும்.

இதன்படி 2ம், 3ம் முன்னுரிமை வாக்குகள் எண்ணப்பட்டு, கூடுதலான வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவாரென்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வாக்குகள் மூன்று கட்டங்களாக எண்ணப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

முதலில் அளிக்கப்பட்ட முழு வாக்குகளும் எண்ணப்படுமென்றும், இரண்டாவதாக ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படும் என்றும், மூன்றுவதாக முன்னுரிமை வாக்குகள் எண்ணப்படுமென்றும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (வெ)

## பீலிக்ஸ் மனு ஏற்கப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்காவுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நியமிமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஒரு உறுப்பினராக நீதியரசர் கே. ஸி. டீ சில்வா அங்கம் வகிக்கமுடியாதென்று திரு. பீலிக்ஸ் டயஸ் ஆர். பண்டாரநாயக்கா தாக்கல்செய்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களினால் நேற்று ஏற்றுக்கொள்ளப் பட்டது.

## சென்னையில்புயல்!

[சென்னை]

தமிழ்நாட்டில் நேற்று 100 முதல் 120 கிலோ மீட்டர் வேகத்தில் புயல் வீசியது!

புயல், மழை காரணமாக தமிழக அரச ஊழியர்களுக்கு நேற்று அரைநாள் விடுமுறை வழங்கப்பட்டது.

துறைமுகவேலைகள் ஸ்தம்பித்தன. விமானசேவைகள் வழக்கம்போல நடைபெறவில்லை. கப்பல்கள், துறைமுகங்களில் அபாயக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

## வானொலி டி. வி. யில்

(கொழும்பு)

ராஜாங்க அமைச்சு நேற்றுப் பிற்பகல் வெளியிட்ட செய்திக் குறிப்பில், தேர்தல் தின

[8ம் பக்கம் பார்க]

★ யாழ்ப்பாணம்

## கடவுச்சீட்டு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ள கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டே கடவுச்சீட்டு அலுவலகம் தற்காலிகமாக நேற்று முதல் மூடப்பட்டுள்ளது என்றும், மீண்டும் இருபத்து ஐந்தாம் திகதி திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு, கிழக்கில் அமைதி நிலவுகிறது ஐ. ஜி. பி. டி. ஐ. ஜி. திருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலையொட்டி நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சிறு சிறு அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும், நாட்டில் அமைதி பேணப்படுகிறதென்றும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பூரண அமைதி நிலவுகிறதென்றும் பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா இராஜசிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின்போது வன்செயல்களைத் தூண்டும் தீய சக்திகளுக்கு எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பைப் பொலிசார் எதிர்பார்க்கின்றனர் என்றும் பொலிஸ் மா அதிபர் நேற்றுத் தெரிவித்தார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு.ஆர். சுந்தரலிங்கம் நேற்று "ஈழநாடு" பத்திரிகைக்குத் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கில் அமைதி நிலவுவது வரவேற்கத்தக்கது என்றும் இப்பிராந்தியங்களில் தலைதூக்கும் எந்த ஒரு சிறு சம்பவமும் தெற்கில் பெரிய அளவில் பிரதிபலிக்குமென்றும் கூறினார்.

"நாடு பூராவும் சுமார் 350 தேர்தல் அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. பிங்கிரியாவில் தேர்தல் வாக்குவாதத்தினால் ஒருவர் கொலைசெய்யப் பட்டுள்ளார்" என்று தெரிவித்த பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், "தேர்தல் கூட்டங்களில் இடம்பெறும்அசம்பாவிதசம்பவங்கள் தொடர்பாக, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் புகார் செய்துள்ளனர்" என்றும் கூறினர்.

## "ஐ. தே. க மக்கள் கட்சியாக விளங்குகிறது" கண்டியில் ஜே. ஆர்.

(கண்டி)

"ஐக்கிய தேசியக் கட்சி இன்று மக்கள் கட்சியாகவிளங்குகிறது. இந்தக் கட்சியைச் சுத்தப்படுத்தி, மக்கள் கட்சியாக மாற்றியதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். மக்களுக்கு சேவை செய்வதைத் தவிர வேறொரு திட்டமும் எனக்கு இல்லை".

இவ்வாறு ஐ. தே. கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தன கண்டி மத்திய சந்தையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"1977 ஆம் ஆண்டு சுதந்திரமான ஒரு சமுதாயத்தை உருவாக்க மக்களிடம் ஆணை கேட்டோம். எம்மைப்பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுத்தார்கள் புதிய தார்மீக சமுதாயத்துக்கான அடிக்கல்லை அரசு அமைத்தது. வேலையற்றோருக்கு வேலை வசதி செய்து கொடுத்தது. ஆயினும் சில வருடங்களுக்குள் இவ்விதமான ஒரு சமுதாயத்தை கட்டி எழுப்புவது கடினமாகும். ஜனாதிபதி தேர்தலில் நான் வெல்லப்போவது உறுதி".

அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவும் மற்றும் பலரும் பேசினர்.

## தடையான இயக்கத்தின் துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

'வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் பின்னர் வேறொன்று கொள்வாரோ?' என்ற தலைப்பில் தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் துண்டுப்பிரசுரம் நேற்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் விநியோகிக்கப் பட்டுள்ளது. "தமிழ்மக்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

## வெளிவாரி பட்டதாரி பரீட்சை யாழ்ப்பாணத்தில் இல்லை!

(கோண்டாவில்)

வெளிவாரி மாணவர்களாகப் பட்டதாரிப் பரீட்சைக்குத்தோற்றும் யாழ்.மாணவர்களின் பரீட்சை மண்டபம், யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களுக்கு மாற்றப் பட்டுள்ளதாக பேராதனை பரீட்சைப்பகுதி உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுத விண்ணப்பித்த மாணவர்கள் கொழும்பு, பேராதனைசென்று பரீட்சை எழுதுவது கஷ்டம் என்றும், பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்துமாறும் கோரியுள்ளனர்.

பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்துமாறும் கோரியுள்ளனர்.

பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஒழுங்குகள்செய்து தரும்படி நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரை மாணவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் றைக்கிளீனுக்காகத் தந்த உடைகளை அதற்குரிய திகதியில் பெற்றுக்கொள்ளாதவர்கள் தயவுசெய்து 31-10-82 க்குமுன்னர் பெற்றுக் கொள்ளவும்.

சன்லைட் றைக்கிளீனேர்ஸ்

யாழ்ப்பாணம் (48‾8)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

நேரடியாக இறக்குமதி செய்த புனரமைக்கப்பெற்ற CD 125, C 90, C 70 HONDA மோட்டார் சைக்கிள்களும், DELICA வான்களும், ELF ISUZU டிரக் வண்டிகளும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன்கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4857

80 ஸ்ரீ தொடர்பிலக்க ஹொண்டா (Honda) CD 12 (Twine) மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. பி. ப. 1-30 முதல் 3-30 வரை பார்வையிடலாம். விபரங்களுக்கு: J. J. ராஜசிங்கம், 9/1, பிளேச்சர் லேன், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கருகாமையில். 4874

நவராத்திரி உற்சவத்திற்குத் திறம் சர்க்கரை, நைவேத்தியப் பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. ஆ. க. கனகசபாபதி சன்ஸ், 106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், போன்: 22457 (4873)

தமிழ், ஆங்கில தட்டச்சு, றோனியோ மெசின்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி, சங்கர் ஹாட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 4864

## தேவை

''யாழ்ப்பாணம் கன்னுதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானத்திற்கு நைவேத்தியங்கள் போடத் தெரிந்த உதவி அர்ச்சகர் ஒருவர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன்காலை 9 மணிக்கு முன் நேரில் வரவும்''. ஆ. சோமநாதன், பொருளாளர், அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம். கன்னுதிட்டி-யாழ்ப்பாணம். 4872

## சேவை

வீடு வளவு, வீடு கட்டக்கூடிய வெறும் காணிகள் வாங்க விரும்பியவர்கள் எங்களுடன் தொடர்புகொண்டால் வாங்கித் தருவோம். திருமண ஒழுங்குகளும் செய்து தருவோம். உடன்தொடர்பு கொள்ளும் முகவரி; செ. சிவகுருநாதர், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 4834

# சகல பாடசாலைகளிலும் விஞ்ஞான வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்!

## உடுப்பிட்டி எம். பி. கூறுகிறார்

(கரவெட்டி)

''விஞ்ஞானக் கல்வி வசதிக்கு வளர்ச்சிக்கு ஓரண்டொரு பாடசாலைகளில் மட்டும் தங்கியிருக்காமல் தொகுதி ஒவ்வொன்றிலும் பல பாடசாலைகளுக்கு உயர் கல்வி விஞ்ஞான வசதி அமைத்துக் கொடுத்து உயர்கல்வி வாய்ப்பினை அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள விஞ்ஞான ஆய்வுகூடமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் அடிக்கல் நாட்டு விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

''விஞ்ஞானம் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்ற போதிலும் அக்கல்வி வசதிகள் நிறைந்த நகரப்புற மக்களது தனிச்சொத்தும் அல்ல. விஞ்ஞான உயர் கல்வி வசதியை நவீன வசதிகளுடன் கிராமப்புறப் பிள்ளைகளுடைய அன்றாட கல்வி வளர்ச்யில் ஒன்றிணைத்து கிராமியப் பாடசாலைகள் கிராமப்புறங்களிலுள்ள திறமைசாலியான மாணவர்களுக்கு தமது ஆற்றலை வளர்த்து விஞ்ஞானத் துறையில் முன்னேற்றுவதற்கு ஆரம்ப விழாவாகவே இன்றைய நிகழ்ச்சி அமைந்துள்ளது.

''காலங்காலமாக கல்வித் துறையில் மறுமலர்ச்சியைக் காண வேண்டுமென கங்கணங் கட்டிக் கொண்ட கல்விமைச்சர்கள். கல்விச் சீர்திருத்தவாதிகள், கல்விப் புனரமைப்புக்கு உயிரூட்டுபவர்கள் கிராமியப் பாடசாலைகளை நகரப் பாடசாலைகளில் அமைந்துள்ள விஞ்ஞான உயர் கல்வி வசதிக்கேற்ற முறையில் ஒவ்வொரு கிராமப் பாடசாலையையும் றேயல் கல்லூரியாக ஆனந்தாக் கல்லூரியாக, சென் ஜோசப் கல்லூரியாக, சென் ஜோன்ஸ் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று கூறினார்களே தவிர இவர்களுடை முயற்சிகள் யாவும் கனவாய், கற்பனையாய், கருத்தற்றதாய் காலத்திற்குக் காலம் மங்கி மறைந்தது.

''இந்த முறையிலே நாட்டிலே பொருளாதார அபிவிருத்திக்கு உயிர் ஊட்டப்பட வேண்டுமானால் விஞ்ஞான அடிப்படைக் கல்வியோடு கிராமப்புறப் பாடசாலைகளில் தன்னிறைவு பெற்ற விஞ்ஞான போதனா பீடங்கள், ஆய்வு கூடங்கள் பேச்சளவில் நில்லாமல் செயலளவில் அமைத்துக் கொடுத்தால் விஞ்ஞான அறிவின் பயன்பாடு கிராமத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு வலுப்பெற்று வளரும் என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

அடிக்கல் நாட்டு விழாவில் கல்லூரி முன்னாள் முகாமையாளரும் சட்டத்தரணியுமான கே. சி. நடராசா, உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ''காலத்தால் அழியாத பணி ஆற்றியவர்''

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்கு அருமையின் பணிகள் காலத்தால் அழியாதவை என்றும் இவரது வாழ்க்கை நெறியும், இலட்சிய வேட்கையும் எதிர்கால இளைஞர்களுக்குஒருசிறந்த எடுத்துக்காட்டாகும் என்றும் கோப்பாய் தெற்கு சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்தலைவரும், மற்றும் பிற ஸ்தாபனங்களிலும் முக்கிய அங்கம் வகித்து சேவையாற்றியவருமான அமரர் தம்பு அருமையின் இறுதி வைபவத்தில் நடைபெற்ற இரங்கலுரையில் சமூகரத்தினம் திரு. எம். கே. இளையப்பு குறிப்பிட்டார்.

திரு. வி. தவராசா, திரு. என். வி. தம்பியப்பா ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர்.

# கின்னஸ் புத்தகத்தில் பரீத் நஸீர்

(புலோலி)

இலங்கையிலே ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு அடுத்தபடியாக ஆறு உலக சாதனைகளை நிலைநாட்டியுள்ள உலக சாதனை வீரரான யாழ். நகரைச் சேர்ந்த பரீத் நஸீரின் பெயரும் உலக சாதனைப் பதிவேட்டில் (கின்னஸ்புத்தகம்) டில்பொறிக்கப்பட்டுள்ளது.

1979ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 137 மணித்தியாலங்கள் 30 செக்கண்டுகள் தொடர்ந்து டுவிஸ்ட் நடனமாடியும் 1980ம் ஆண்டு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை வலம்புரி பாணியில் பின்னோக்கி சைக்கிளோடி 30 மணித்தியாலத்தில் 270 மைலை ஓடிமுடித்தம், 1980ம் ஆண்டு வவனியாவில் 59 மணித்தியாலங்களாகத் தொடர்ந்து கைதட்டி நடனமாடிமுடித்தும், 1981ம் ஆண்டு 25 கொடிய விஷப்பாம்புகள் அடங்கிய கண்ணாடிக்கூடில் 120 மணித்தியாலங்கள் 20நிமிடங்கள் குடியிருந்தும், 1981ல் யாழ்ப்பாணத்தில் 120 மணித்தியாலங்கள் 17 நிமிடம் 10 செக்கன்டுகள் தொடர்ந்து 'போல் றூம்' நடனமாடியும் 1982ல் தொடர்ந்து சைக்கிளோடி 189 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள், 10 செக்கண்டுகளில் 2438 மைல்களை ஓடிமுடித்தும் ஆறு உலக சாதனைகளை மேற்கொண்டிருந்த திரு. பரீத் நஸீர் இவ்வாண்டு இறுதிக்குள் மேலும் மூன்று புதிய உலக சாதனை முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

# கராட்டி சாம்பியன்

(புலோலி)

அகில இலங்கை ரீதியாக கராட்டிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட கராட்டிப்போட்டியில் கறுப்புப்பட்டிப் பிரிவில் பருத்தித்துறை கராட்டிச் சங்கத்தைச் சேர்ந்த கராட்டி வீரன் எஸ், கணேசமூர்த்தி 1982ம் ஆண்டிற்கான சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. கணேசமூர்த்தி, கராட்டிப் போதனாசிரியர் திரு. எம். இரத்தினசோதியின் மாணவராவர். இவர் தற்போது வல்வெட்டித்துறை மக்கள் வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிவருகின்றார்.

சிறந்த குத்துச்சண்டை வீரரான இவர் யாழ். மாவட்டத்தில் கராட்டிப் போட்டிகளில் பலமுறைசாம்பியனாகத்தெரிவு செய்யப்பட்டவர். கராட்டிப் போட்டி கறுப்புப் பட்டிப்பிரிவில் சாம்பியனாகத்தெரிவுசெய்யப்பட்ட இவர் விளையாட்டமைச்சின் பாராட்டையும் கராட்டிப் போதனாசிரியர் திரு. இரத்தினசோதியினதும், பொது ஸ்தாபனங்களினதும் பாராட்டுகளைப்பெற்றுள்ளார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## அச்சுவேலியில் கூட்டுறவுமுறையில் பாற்பண்ணை!

[புலோலி]

அச்சுவேலியில் கூட்டுறவு அடிப்படையில் பாற்பண்ணை அமைப்பதற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன வென்றும், இப்பாற்பண்ணையை அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட 30 ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்துவதற்கானதிட்ட நடைமுறைகளை மேற்கொள்ள அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனரென்றும் அச்சுவேலி கிராமோதய சபைத் தலைவர் திரு. கே, இராசதுரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் பேசுகையில்: கோழி, கால் நடைவளர்ப்பதற்கு இலங்கை வங்கியிடமிருந்து கடன் வழங்கும், திட்டத்தை இலகு படுத்தும் முகமாகக் கிராமிய கைத்தொழில் அமைச்சு வடபகுதி இலங்கை வங்கியுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது'' என்றார்.

''அச்சுவேலி கிராமோதய சபையினால் அண்மையில் பனம்பொருள் அபிவிருத்தி சபையின் ஆதரவுடன் சிறு கைத்தொழில் சம்பந்தமாக கிராமிய கைத்தொழில் சம்பந்தமாக கிராமியகைத் தொழில் அமைச்சின்உதவிச்செயலாளர் திரு. மு. குமாரதாசன், அமைச்சின்விவசாயகால்நடைநிபுணர் கலாநிதி ஏ. சக்திவேல் ஆகியோர் சமூகமளித்திருந்த கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க அச்சுவேலியில் கிராமிய கைத்தொழில் அமைச்சினால் இலகு பொறியியல் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து நடத்துவதற்கான கட்டடத்தை அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இலவசமாக வழங்கவுள்ளது. இவ் இலகு பொறியியல் பயிற்சி நிலையம் 5 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்களைக் கொண்டதாக அமையும்'' என்றும் அவர் கூறினார்.

''கிராமியக் கைத்தொழில் அமைச்சின் உதவியுடன் கால்நடை வைத்தியப்பிரிவு ஒன்றை அமைத்து இப்பகுதியில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இவ் வைத்தியப் பிரிவு நிறுவப்படும் வரை தற்போது பருத்தித்துறையில் இயங்கும் அரச கால்நடை வைத்தியப்பிரிவில் இருந்து மேலதிக கண்காணிப்பு வைத்திய உத்தியோகத்தரின் சேவைபெறப்படும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## தேவை

எங்கள் நைலோன் மீன்பிடி வலைகள் நாடு பூராவும் சந்தைப்படுத்துவதற்கு விற்பனை முகவர்கள் தேவை.

பிணைப்பணம் அவசியம்.

நல்ல விற்பனைக் கழிவு உண்டு.

உங்கள் விண்ணப்பங்களை 5-11-82-க்கு முன் பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

பொதுமுகாமையாளர்
சீ-நோர், குருநகர், யாழ்ப்பாணம். 4830

## தேவை

எங்கள் உற்பத்திப் பொருட்களான கண்ணாடி நார் மீன்பிடி வள்ளங்கள், நைலோன் மீன்பிடி வலைகள் முதலியன நாடு பூராவும் விற்பனைசெய்வதற்குத் திறமையுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

கவர்ச்சிகரமான வியாபார ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை 5-11-82-க்கு முன் பதிவுத் தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

பொதுமுகாமையாளர்
சீ-நோர், குருநகர், யாழ்ப்பாணம். 4831



# ஆப்கானிலிருந்து வெளிநாட்டு துருப்புக்கள் வாபஸ் பெறப்படவேண்டும்

## பாகிஸ்தான் ஜனாதிபதி கோரிக்கை

பீக்கிங், அக். 18

"ஆப்கானிஸ்தானிலிருந்து சகல வெளிநாட்டு துருப்புக்களும் வாபஸ் பெறப்பட்டாலே அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாண முடியும்"

இவ்வாறு சீனாவுக்கு ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனப் ஷியாவுல்ஹக் சீனப் பிரதமமந்திரியினால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"சீனாவும் பாகிஸ்தானும் ஏனையநாடுகளுடன் நட்புறவாகவிருக்கவே விரும்புகின்றன. வல்லரசுகள் தமது துருப்புக்களை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றாத பட்சத்தில் அது இன்னொருநாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக அமையும்.

"பாகிஸ்தான் இந்தியாவுடனான தனது உறவுகளை மேலும் விருத்திசெய்யவே விரும்புகிறது. அந்நாட்டுடன் பொருளாதார, வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்வதிலும் அக்கறை கொண்டுள்ளது.

சீன - பாகிஸ்தான் உறவு தொடர்ந்தும் நீடித்துநிலைக்க வேண்டும். இருநாடுகளும் பொருளாதார, வர்த்தகத் துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்கவேண்டும். என்றார்.

சீனபிரதம மந்திரியும் இவ்வைபவத்தில் உரையாற்றினார். (வெ)

## ஓமானில் அமெரிக்க இராணுவ ஒத்திகை

பெய்றூட், அக். 18

ஓமான் பிரதேசத்தில் அமெரிக்க விமானப்படை, கடற்படை, தரைப்படைகளின் ஒத்திகைகளை நடத்த, அமெரிக்க ராணுவத்துறை திட்டமிட்டுள்ளது. இந்த ஒத்திகைகளில் ஓமான் ராணுவமும் கலந்துகொள்ளும் என்று, 'வாஷிங்டன் போஸ்ட்' அறிவித்துள்ளது.

"யுத்தப் பூசல்கள் நிறைந்த அந்தப் பிராந்தியத்தில், பெருமளவில் அமெரிக்கப்படைகள் கொண்டுசெல்லப்படுவது ஓர் ஆத்திரமூட்டலாகும். அந்தப் பிராந்திய நிலவரம் மேலும் சீர்கெடுவதற்கு வழிவகுப்பதாகும். அமெரிக்க ராணுவ ஒத்திகைகளின் பிரதான நோக்கம், 'ஓமான் முடியாட்சிக்குத் தனது ஆதரவைத் தெரிவிப்

(6ம் பக்கம் பார்க்க)

## லெபனான் ஜனாதிபதி நியூயோர்க் பயணம்

### ஐ. நா. கூட்டத்தில் உரையாற்றுவார்

பெய்ரூட், அக். 18

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக லெபனான் ஜனாதிபதி அமின்கமாயல் நேற்று நியூ நியூயோர்க் பயணமானார்.

இவர் லெபனானிலிருந்து எல்லா அந்நியத்துருப்புக்களும் வெளியேற்றப்படவேண்டுமென்று ஐ. நா. பொதுச்சபையைக் கேட்டுக்கொள்வாரெனத் தெரியவருகிறது.

லெபனான் ஜனாதிபதி நாளை வாஷிங்டனிற்கு விஜயம் செய்து, அங்கு அமெரிக்க ஜனாதிபதி றீகனைச் சந்தித்து லெபனான் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பின்போது அமின் கமாயல் லெபனான் பொருளாதாரத்தை புனரமைக்கும் பொருட்டுஜனாதிபதிறீகனிடம் உதவிகோருவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

லெபனானில் ஐ. நா. அமைதிப்படைகள் தொடர்ந்து இருக்கவேண்டுமென்றும் அமின் கமாயல் ஐ. நா. பொதுச்செயலாளரைச் சந்தித்து வற்புறுத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது. (வெ)

## "சாதாரண மக்கள் இதயங்களிலும் வாழ்பவர் பாரதி"

[மன்னார்]

"பாரதியார் புரட்சிக் கவி, வர கவி, எழுச்சிக் கவி, மகா கவி என்ற பெயர்களைப் பெற்றவர். சாதாரண மக்களும் அவரின் பெயரைச் சொல்லக் கூடிய அளவுக்கு அவர் புகழ் பெற்றுள்ளார். புகழ் பெற்ற பாரதியாரின் விழாவை நாம் கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்."

இவ்வாறு மன்னார் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் எம்.பி திரு. பி. எஸ். சூசைதாசன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட இளம் பட்டதாரி மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட இவ்விழாவில் மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. பி.எம். செபமாலை, மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கோபாலரட்ணம், கல்வி அதிகாரி ஜனப் இசற். ஏ. றஹீம், கலைவாதி கலீல், மன்னார் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ் திவகலால், திருமதி மெரினா சூசைதாசன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார்எம்.பி திரு பி எஸ்.சூசைதாசன் தமதுரையில்:-

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால், மன்னார் திறந்தவெளியரங்கில் பாரதிக்குமணிமண்டபம்அமைத்து அவரின் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான பொறுப்புகள் அரசாங்க ஊழியரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் ஏதோ காரணத்தினாலும், ஜனாதிபதிதேர்தலுக்காகவும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் கொண்டாடப்படவிருந்த பாரதி நூற்றாண்டுவிழா ஒத்திவைக்கப்பட்டது.

எப்படியாவது மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை பாரதியாரின் 101-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் என நம்புகிறேன். இவ்வேளையில் மன்னார் மாவட்ட இளம் பட்டதாரிகள் மாணவர் சங்கம் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி பாரதிக்கு அஞ்சலி செலுத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒருவனின்சிந்தையில் ஏற்படும் ஞானமே கவிதையாக வெளிவருகிறது. பாரதி சிறு வயதிலேயே தாயை இழந்து தந்தையின் அன்பை இழந்தாலும் எந்தையும் தாயும் இருந்தது இந்நாடே என சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் தாய் நாட்டையும் நினைந்து பாடினார் பாரதி சிறுவயதிலேயே நல்லகற்பனை சக்தியைப் பெற்றிருந்தார் இயற்கையோடு ஒன்றிணைந்து சென்றார்.

எட்டுவயதுவரை தோட்டங்களில் உலாவித்திரிந்த பாரதி சிட்டுக் குருவிகளைக் கண்டு அவற்றை வர்ணித்துப் பாடினார். சிட்டுக் குருவிகளுக்கு இறக்கைகளைக் கொடுத்தது போல்எனக்கும் இறக்கைகளைத் தரமாட்டாயா இறைவா என இறைவனைக்கேட்டார். சிட்டுக் குருவிகள் சுதந்திரமாக பறந்து

[7-ம் பக்கம் பார்க்க]

## சீன - பிரான்ஸ் கம்யூ. கட்சி உறவுகள்

பீக்கிங், அக். 18

சீனாவின் ஆளும்கம்யூனிஸ்ட் கட்சியும், பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியும் உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்ட

இதுதொடர்பாக இருகட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. பிரான்ஸ் கம்யூனிஸ்கட்சியின் பத்திரிகை காரியாலயமொன்றை பீக்கிங்கில் அமைக்க சீனா கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சீனகம்யூனிஸ் கட்சிக்கும், சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட்கட்சிக்குமிடையிலான உறவுகள் 1960-ம் ஆண்டிலிருந்து பாதிப்படைந்துள்ளது. (வெ)

## "ஆயுதப்போட்டியின் வேகம் சுதந்திர நாடுகளை அச்சுறுத்துகிறது!"

### கூட்டுசேரா நாடுகளின் அமைச்சர்கள் கண்டனம்

நியூயோர்க், அக். 18

'ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், இனவாதம், நிறவெறி, ஷியோனிஸம் ஆகிய சக்திகளின் செயல்களின் விளைவாகவே இன்றைய சர்வதேச நிலைமை உக்கிரமடைந்துள்ளது' என்று ஐ. நா. தலைமையகத்தில் நடைபெற்று முடிந்த கூட்டுச்சேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களது கூட்டத்தையொட்டி வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானம், முன்னேற்றம், ஒத்துழைப்பு ஆகியவற்றுக்காக உழைக்கும் மக்களுக்கு எதிராக செயல்படும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு வெளிநாட்டமைச்சர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'ஆயுதப்போட்டியின் குறிப்பாக அணுவாயுதப் போட்டியின் புதிய வேகம் சுதந்திர நாடுகளுக்கும் சமாதானம், பந்தோபஸ்துக்கும் மனித குலத்தின் உயிர் வாழ்க்கைக்குப் பேரச்சுறுத்தலை விளைவிக்கிறது' என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனவாத ஆட்சிகளுக்கும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கும் அமெரிக்கா அளித்துவரும் உதவிகள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. லெபனான் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குக் கண்டனம் தெரிவித்து கூட்டுச்சேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், பாலஸ்தீன மக்கள் பி எல்.ஓ வின் தலைமையில் நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்தனர்

பெய்ருத்தில் பாலஸ்தீனிய அகதிகள் முகாமில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் குறித்து பாதுகாப்புச்சபை விசாரணை செய்யவேண்டும் என்றும், மத்திய கிழக்கின பிரச்னைக்கு ஐ. நா. வின் தலைமையின்கீழ் விரைவில் நியாயமான நிரந்தரமான தீர்வு காணவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

1983 மார்ச் 7 முதல் 11வரை இயக்கத்தின் 7வது உச்சி மகாநாட்டை புதுடில்லியில் நடத்துவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானித்தது.

## மதுசாலைகள் மூடப்படும்

[கரவெட்டி]

நாட்டிலுள்ள மதுபான விற்பனவு நிலையங்கள் இம்மாதம் 19, 20, 21-ம் திகதிகளில் மூடப்பட்டு இருக்கும். ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சடலம் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

நாற்பது வயது மதிக்கத்தக்க இனம் தெரியாத ஒருவரின் சடலத்தை சுன்னாகம் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

அளவெட்டியில் இச்சடலம் நேற்று அனாதரவான நிலையில் கிடக்கக்காணப்பட்டது.

அடிகாயங்களுக்குள்ளாகி இறந்திருக்கலாம் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் இச்சடலம் வைக்கப்பட்டுள்ளது. (மா)

"வழக்குகளில்

## மக்களுக்கு விரைவாகநீதி கிடைக்க உதவவேண்டும்"

### வழக்கறிஞர்சங்க கூட்டத்தில் 'இந்திரா'

புதுடில்லி, அக் 18

"மக்களுக்குவிரைவாகவும், அதிக செலவின்றியும் நீதி கிடைக்க நீதித்துறையினர் உதவவேண்டும். இஸ்ரேல் தென்னாபிரிக்கா நாடுகள் ஆக்கிரமிப்புக்கொள்கையைக் கடைப்பிடித்து, தமக்குசொந்தமில்லாத பிரதேசங்களைக் கைப்பற்றிவருகின்றன.

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி சர்வதேச வழக்கறிஞர்கள் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சிறந்த வழக்கறிஞர்களை வழக்குகளில் ஏற்படுத்த முடியாதவர்களுக்கு நீதிகிடைக்காமல் போய்விடுகிறது எல்லா பிரச்னைக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணவேண்டும்.

நாடுகளுக்கிடையே ஒற்றுமை வலுப்பெறவேண்டும். பாலஸ்தீனியர்களின் பிரச்னை 30 ஆண்டுகாலமாகத் தீர்க்கப்படவில்லை என்றார். [வெ]

### மணிவாக்கு

மாதர் யாவரும் ஜகன்மாதாவின் அம்சங்களே யாவர். அவர்களைத் தாய் எனவே கண்டு கருத வேண்டும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## அங்கொடை அநியாயம்

பழைய கட்டடம் எந்நேரமும் இடிந்து விழும் அபாயத்துக்குள்ளானதென்பது அதிகாரிகளுக்குத் தெரியாமலிருந்ததா?

இடிந்து விழுந்தபின்னரே இது அத்தகைய கட்டடம் என்று கணிப்பதா இன்றைய அரசின் பொறியியல் நிபுணரின் கொள்கை?

ஒருவேளை இவ்வித உதவாக் கட்டடங்களையே மனநோயாளருக்கு ஒதுக்கிவிடலாமென்றும் செயற்பட்டிருக்கலாம். நம்பக் கூடியது.

கடந்த வாரம் அங்கொடை மன நோயாளர் ஆஸ்பத்திரிக் கட்டடம் திடீரென விழுந்ததால் ஆறு நோயாளர் மரணமடைந்ததும் பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதும் தெரிந்ததே!

மனநோயாளரை (பைத்தியகாரர்) ஒதுக்கி வைத்து, அவர்களின் குடும்பங்களுக்கே ஒரு வடு ஏற்படுத்தி வந்த காலம்மலையேறிவிட்டது.

இன்றும் சில இடங்களில் நாகரிகமற்றவர்கள், நல்லறிவு பெருதவர்கள், உலகில் நடைபெறும் அற்புத மாற்றங்களை கண்டு கேட்டறியாதவர்கள் இவ்வாறு நடப்பது கண்கூடு.

மருத்துவ உலகில் ஏற்பட்ட பெருமாற்றத்தால், மனநோய் ஒரு பிரத்தியேகமான கணிப்புக்குரியதென்றும் மனநோயாளர், குஷ்ட நோயாளரைப் போல், சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட இடங்களில் சிகிச்சைபெற வேண்டுமென்ற கொள்கை கைவிடப்பட்டுள்ளது

நகரங்களில்உள்ள பெரியாஸ்பத்திரியிலும், மற்றைய ஆதார ஆஸ்பத்திரிகளிலும் மனநோய் நிலையம் இயங்கி வருவது இந்த நோய் பற்றிய சமுதாய நோக்கின் மாற்றத்தை நிரூபிக்கின்றது.

இந்த நிலையில், நெடுங்கால நோயாளர்களுக்கும் நீண்டகால ஆஸ்பத்திரி சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கும் அங்கொடையில் பிரத்தியேக நிலையம் தேவையாகவே இருந்தது.

காலத்துக்குக் காலம் அங்கொடை நிலையம் சீரழிந்து பெரும் கண்டனங்களுக்குள்ளாகி வந்ததை நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

இந்தப் பின்னணியில் இக்கோரச்சம்பவம், அதிகாரிகளின் அசட்டையென்று கொள்வதைவிட வேறென்ன காரணம் கூறலாம்?

கடந்த யுத்தகாலத்தில் இந்த ஆஸ்பத்திரியில் குண்டு வீசப்பட்டதென்ற தகவல் பலருக்குத் தெரியும். அந்த நிலைமையில், இதற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எவ்வகையிலும் நோயாளிகளை அங்கு தங்க வைத்தது தகாத செயல்.

சாதாரண மனிதருக்கு நேரும் கதியிலும் மோசமானது இதுவென்று எவரும் கண்ணீர்வடிப்பர்.

நடந்தபின் நிவாரணம் அளிக்கு செயலே நாட்டில் நீண்டகாலம் இடம்பெறுகின்றது. இதை ஒரு படிப்பினையாகக் கொண்டு பழைய கட்டடங்கள் ஜனத்தொகை அதிகரிப்பைக்கட்டுப்படுத்தும் நிலையங்களாகக் கொள்வதை தடுத்து நிறுத்தவேண்டும்.

## இது கிரிக்கட்டா?

''ஆண்டவன் கணிப்பில் வெற்றி தோல்வியென்பதற்கு விசேட புள்ளிகள் கிடையா; ஆட்டத்தை எவ்வாறு விளையாடினுய் என்பதே கேள்வி'' ஒரு பிரபல ஆங்கிலப்புலவனின் கருத்து இது.

உலகம் போற்றும்உத்தம விளையாட்டாகிய கிரிக்கட்டின் குறிக்கோளும் இதுவே. நேர்மையை நிலைநாட்டுஞ் செயலே 'கிரிக்கட்' என்று சொல்வது வழக்கம்.

சேர் பட்டம் பெற்ற, உலகப் பிரபலம் பெற்ற கிரிக்கட் 'அரசனுன' டொன் பிராட்மன்டெஸ்ட் விளையாட்டுகளில் குவித்த பல்லாயிரம் ஓட்டங்கள் மக்களைப் பிரமிக்க வைத்தன. ஆட்டங்களில் அடுத்தடுத்து இடம்பெறும் 'சென்சரீஸ்' மக்களை மயக்கும். ஆனுல் விளையாட்டு வீரன் பிராட்மன் அசையவே மாட்டார். தம்முடைய ஒவ்வொரு அசைவும் விளையாட்டின் நுணுக்கமான கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாவென்பதே அவருடைய விசனம்.

இவ்வித மகத்தான சாதனையை நிலைநாட்டி, உலக மக்களின் மதிப்பை இந்த விளையாட்டுக்குத் தேடிக் கொடுத்த வீரர். இவரைப்போல் பலர்.

இதன் காரணமாக, செல்வந்தர்களின் விளையாட்டாகக் கருதப்பட்ட கிரிக்கட் உலகின் பலநாடுகளில் மக்களின் விளையாட்டாக மாறியதோடு, விளையாட்டு வீரர்களுக்கு பெரும் வேதனம் அளிக்கும் முயற்சியாக உயர்ச்சியடைந்தது.

பணமெல்லாம் இவ்வித விளையாட்டுத் தரத்திலும் சிறப்பிலும் மேன்மையடைய முடியாதென்பது உண்மை.

அதே சமயம் தரமும் விளையாட்டின் அழகும் சிறப்புற, பார்வையாளர் கூட்டம் அதிகரிக்க, இவ்வித டெஸ்ட் போட்டிகளை ஒழுங்கு செய்யும் ஸ்தாபனங்கள் இவற்றை வியாபார நோக்குடன் அணுகுகின்றன.

இந்த வியாபாரிகளுக்கு பலியானவர்களே இன்று சட்டத்தை மீறி தென் ஆபிரிக்காவிற்கு சென்ற 14 இலங்கை கிரிக்கட் வீரர்கள்.

கடத்தல் காரர் போல் கள்ள வழிகளைக்கையாண்டு அரசு திடமாக இட்ட தடையை மீறி வெளியேறுகின்றவர்கள் விளையாட்டு வீரரா அல்லது கடத்தல் வியாபாரிகளா?

இந்தியாவில் அண்மையின் நடைபெற்ற ஆட்டங்களில் இலங்கை அணிக்கு தலைமைதாங்கிய டெஸ்ற் கப்டின் பந்துல வர்ணபுர உட்பட 14 திறமைசாலிகள் பிரிட்டிஷ் விமானத்தில் ஹொங்கங்வழியாக தென் ஆபிரிக்காவுக்குச் சென்றுள்ளனர். அங்கு பல ஆட்டங்களில் பங்குபற்ற ஏற்பாடுகள் உண்டு.

விளையாட்டுக்கு இழுக்கு நாட்டுக்கவமானம், ஆட்சிக்கு நிருவாணசவால். உலகிலேயே எங்கள் பெருமையைப் பாதிக்கும்பெருங்குறை.

எவ்வகையிலும் பொருள் தேடும் வியாபார உலகம் இந்த நாட்டில் நாளுக்கு நாள் ஆதிக்கம் செலுத்துவதை இதுவற்புறுத்துகின்றது.

இன ஒதுக்கலும் 'புடலங்காயு' மென்று சொல்லி, நம்மநாட்டிலும் இது உண்டுதானே' என்று ஏளனம் செய்து புறப்பட்டார்களோ? தக்கதண்டனை தேவை.

# ஜே. ஆர்., ஹெக்டர் வருகை, கிழக்கில் குமார், கொல்வின் 'குண்டு'

# நாட்டில் முதல்முறையாக நடக்கும் ஜனாதிபதி தேர்தல்

யாழ்ப்பாணத்துக்கு யானை வருகிறதென்ருல், அது ஒரு வேடிக்கை! ஏனென்ருல் இங்கு சாதாரணமாகக் காணமுடியாத ஒரு மிருகம் அல்லவா, அது!

அதுபோல்தான் முற்றவெளியில் ஹெலிக்காட்டர் விமானம் வந்திறங்குவதும்,வானத்தில் வேடிக்கை காட்டுவதும்!

இந்த விநோத விளையாட்டைப்பார்க்க மக்கள் திரளுவதில் ஆச்சரியமென்ன?

யாழ்ப்பாணத்தில் – முற்றவெளிப்பகுதியில் இதுவரை சமீபகாலமாக எத்தனையோ விளையாட்டுக்களையும், விபரீதங்களையும் பார்த்திருக்கின்ருேம். குழப்பங்கள், வன்செயல்கள், மின்சார விபத்துக்கள், பொலிஸ். ராணுவத் தாக்குதல்கள்–எல்லாம் நடந்தும்கூட வேடிக்கையென்றதும் மக்கள் கூடிவிடுகிருர்கள்! அது நமது மக்களின் சுபாவம்.

தேர்தல் பிரசாரக்கூட்டங்களும்கூட அப்படித்தான்!

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வெறும் வேட்பாளராக மாத்திரம் வரவில்லை. இந்த நாட்டின் சகல வல்லமையுமுள்ள ஜனதிபதியாகவே வந்தார். அதனுல்தான் ஏனைய கட்சிவேட்பாளர்களுக்கில்லாத பாதுகாப்பும், பரபரப்பும்!

ஜனதிபதியாக இருந்து கொண்டே முதற்தடவையாக பிரசாரத்துக்கு வந்தமையால் அவருக்குப் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் கொடுப்பது அதிகாரிகளின் கடமையாயிற்று.

திரு. ஜெயவர்த்தன அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயம் யாழ்ப்பாணம் வந்து முற்றவெளியில் நிகழ்த்திய முற்றுப்பெருத உரை இன்னமும் காதில் ஒலிக்கின்றது. ஜனதிபதியானதின் பின்னர் அவர் யாழ்ப்பாணம் வந்து பல இடங்களிலும் நிகழ்த்திய உரைகளிலும் அதே தொனிதான் ஒலித்தது.

அன்றைய கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. இன்றைய கூட்டம் பாதுகாப்புடன் நடந்து முடிந்தது.

### ஹெக்டரின் கூட்டம்

யாழ். முற்றவெளிப்பகுதியில் நடந்த ஏனைய கூட்டங்களுக்கும் மக்கள் குறைந்துவிடவில்லை. பதவியில் இருப்பவர்களும் இல்லாதவர்களும் இருக்கப்போகின்றவர்களும்–நடத்தப்பட்ட கூட்டங்களுக்கெல்லாமே சனக்கூட்டம் குறையவில்லை வானத்தை வில்லாக வளைப்பேன் என்போரும், மணலை கயிருகத் திரிப்பேன் என்போரும்–நடித்துக்காட்டுவோரும், சிரித்துக் காட்டுவோரும் – பாடிக்காட்டுவோரும் மக்களுக்கென்ன, இலவசமாகப் பொழுதுபோகிறதே!

பாதுகாப்பு இல்லாவிடினும், திரளாகக்கூடிக் கூட்டங்களைப் பார்த்தார்கள். ஆரவாரம் செய்தார்கள்; குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் திரு. கொப்பேக்கேடுவ பேசிய கூட்டத்துக்கு

### பி. எஸ். பி.

மக்கள் ஏராளமாகத் திரண்டு வந்ததைக் குறிப்பிடவேண்டும்.

முன்னைய அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இப்பகுதியில் பெரும்பாலும்வேகமற்றிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனதிபதி பதவிக்கான வேட்பாளர் கூட்டங்களுக்கு மக்கள் இவ்வளவு திரளாக வந்து கூடியது ஆச்சரியமளிக்கும் விடயம்.

திரு கொப்பேக்கடுவ அமைச்சர் பதவியிலிருந்த காலத்தில் வடபகுதியின் நிலைமை பற்றி வெளியிட்ட சில கருத்துக்கள் இங்குமனத்தாங்கலையேற்படுத்தியிருந்தது உண்மைதான்–குறிப்பாக வல்வெட்டித்துறைமூலம் தமிழ் நாட்டுக்கு அரிசி கடத்துகிருர்கள் என்ற அவரது கூற்றைக் கூறலாம் ஆதாரபூர்வமாகஇது மறுக்கப்பட்டபோதிலும் திரு. கொப்பேக்கடுவ தமது கருத்தை அப்போது மாற்றிக்கொள்ள மறுத்துவந்தார்.

இப்படி நடந்துகொள்வதன் மூலம் சிங்கள மக்களின் மனங்களில் வீரனுகத்திகழ முடியும் என்று சில தலைவர்கள் கருதிவிடுகிருர்கள் இப்பொழுதும்கூட சில அமைச்சர்கள் இந்த வகையிலேயே நடந்துகொள்ளப்பார்க்கின்ருேம்.

திரு கொப்பேகடுவவுக்கு வடபகுதியில் கிடைத்த வரவேற்பு அவருக்கே அதிர்ச்சியூட்டுவதாய் இருந்திருக்கும்.

சிறிமா ஆட்சியின்போது யாழ்ப்பாணத்து மிளகாய்க்கும் வெங்காயத்துக்கும் ஏற்பட்ட கிராக்கியும், அதனுல் நமது மக்கள் அடைந்த வருவாயும் மறந்துபோய்விடவில்லை. ஹெக்டருக்கு கூட்டம் கூடியதற்கு இதுவும் ஒரு காரணம்.

எனவே அவர் தமது பழைய கருத்தை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பமாக இந்த யாழ்ப்பாண வருகை அமைந்தது எனலாம். தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்குமானுல் சிங்களமக்கள் மத்தியில் மட்டுமின்றி முழு நாட்டுக்குமே ஒரு வீரனுக அவர் மிளிரமுடியும்!

### கொல்வின் குண்டு

குடிஇயல் உரிமையை இழந்தவர்கள் ஜனதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட முடியாது. அவ்வாறு ஈடுபடின் அந்த வேட்பாளர் வெற்றிபெற்ருலும் அது தேர்தல் வழக்கின் மூலம் செல்லுபடியாகாமல் போகும்.

இந்த சிக்கல்களை அறிந்தே திருமதி பண்டாரநாயக்க தமது கட்சியின் வேட்பாளரான திரு. ஹெக்டர்கொப்பேகடுவவின் கூட்டங்களில் கலந்துகொள்ளாமலும் அவருக்காக பிரசாரங்களில் ஈடுபடாமலும் இருந்து வருகின்ருர்.

இருந்தாலும் குடியியல் உரிமைகளை இழந்த ஒருவரைத் தலைவராகக் கொண்ட ஒரு

(8–ம் பக்கம் பார்க்க)

## துர்க்கா தோத்திரம்

- ச. தங்கமாமயிலோன்

சிவஜய துர்க்கா போற்றி
சீர்தரு சிவையே போற்றி
பவபயந் தீர்ப்பாய் போற்றி
பார்க்குயி ராளுய் போற்றி
நவமருள் நலனே போற்றி
நாரணி யாளுய் போற்றி
தவநயந் தருவாய் போற்றி
சண்டிகா போற்றி போற்றி

வீரமே விளக்கே போற்றி
வீரசுந் தரியே போற்றி
தீரமே திகழ்வே போற்றி
தீவளி வானே போற்றி
வாரமார் வடிவே போற்றி
வனத்துறை வனப்பே போற்றி
சாரமார் தவமே போற்றி
சண்டிகா போற்றி போற்றி

வீரருள் விறலே போற்றி
விளக்கரு விளக்கே போற்றி
ஆரருள் மருந்தே போற்றி
அருவுரு வாளுய் போற்றி
சீரகத் தொழிர்வே போற்றி
சிறந்தநல் லருளே போற்றி
தாரக பதமே போற்றி
சண்டிகா போற்றி போற்றி

ஊழ்வினை துரப்பாய் போற்றி
ஓப்பிலா மணியே போற்றி
ஏழ்புவி புரப்பாய் போற்றி
எண்பெருந் துணையே போற்றி
சூழ்மயக் கொழிப்பாய் போற்றி
சுற்றமு மாவாய் போற்றி
தாழ்வினை தகர்ப்பாய் போற்றி
சண்டிகா போற்றி போற்றி

(மிகுதி நாளை)

# மன்னார் குளங்களை புனரமைக்க ரூ. 8 கோடி!

(மன்னார்)
மன்னார்- கட்டுக்கரை, அகத்தி ஆகிய குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக உலக வங்கி 8 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இதனை முன்னிட்டு காணி, காணி அபிவிருத்தி அமைச்சினால் கட்டுக்கரை, அகத்தி ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் செய்கை பண்ணப்படும். விவசாயக் காணிகளின் தொகை, விவசாயக்குடும்பங்களின் தொகைபோன்ற புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

# தெட்சிணாமருதமடு கொலை வழக்கு ஒத்திவைப்பு

(வவனியா)
வவனியா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டவிருந்த தெட்சிணா மருதமடு 1977 ஆவணி இனக்கலவரக் கொலைவழக்கில் பிரதம சாட்சி சுதர்மன் போல் பெரேரா சமுகமளிக்காததால் விசாரணை டிசம்பர் மாதம் 13ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில்தெட்சிணாமருதமடுவைச் சேர்ந்த தி. சிவசுப்பிரமணியம், அ. சுப்பிரமணியம், கு. ஆனந்தன், த. திசைவீரசிங்கம் ஆகிய நான்கு இளைஞர்கள் எதிரிகளாவர்.

இவர்களுக்கெதிராக; முருகமணவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. வண்டலின் பெரேரா, பாலித பிரான்சிஸ் பெரேரா, ஆகியோரைச் சுட்டுக் கொலைசெய்தது, சுதர்மன் போல் பெரேராவை கொலைசெய்ய எத்தனித்தது, அவர்கள் குடியிருந்த வீட்டைக் கொழுத்தியது, சட்டவிரோதமாகக் கூடியது போன்ற ஒன்பது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி திரு. கே. எஸ். பாலகிருஸ்ணனின் உதவியுடன் சட்டத்தரணி திரு. கனகமனோகரனும், அரசதரப்பில் அரசசட்டத்தரணி திரு. கே. வி. எஸ். ஸ்ரீஸ்கந்தகுமாரும் ஆஜராகியிருந்தார்கள்.
(வெ)

# சிசுக் கொலை வழக்கு: சந்தேகநபர் பிணையில்

(வவனியா)
சிசுக்கொலைவழக்கில் சந்தேகநபர் ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பனங்கட்டிக்கொட்டுவில் வசிக்கும் சுவாமிநாதன் அகஸ்டின் (27 வயது) என்பவர்மீது தனது ஒரே மகளான புவனபெப்பசுவா என்ற இரண்டரை வயது சிசுவை மன்னார் வாவியில் வீசிக்கொலை செய்ததாக மன்னார் பொலிசாரினால் குற்றஞ்சாட்டி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மனுதாரருக்காக ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரன் மனுதார் சார்பில் மன்னார் நீதிமன்றில் அங்கொடை வைத்தியசாலைமனநோய் மருத்துவ நிபுணர் டாக்டர் ஜி எஸ். ஞானசிங்கம் சமர்ப்பித்த வைத்திய அறிக்கையின் பிரதியைச் சமர்ப்பித்து மனுதார் மனநோயாளியாக இருந்ததோடு இச்சம்பவத்திற்கு முன்னர் இவர் அங்கொடை, மந்திகை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றதுடன், இச் சம்பவத்திற்குப் பின்னரும் அங்கொடையில் அனுமதிக்கப்பட்டு இருந்தவர் என்றும் தெரிவித்தார்.

வைத்திய அறிக்கையில் மன்றினால் மன்னிப்புப் பெறும் அருகதை எதிரிக்குண்டு என்று சிபார்சு செய்யப்பட்டு இருந்தது.

இக் காரணங்களை ஏற்றுக்கொண்ட வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு, ஜே. ஜி. ஆசீர்வாதம் எதிரியை பிணையில் விடுமாறு மன்னார் நீதிவான் மன்றுக்கு உத்தரவு பிறப்பித்தார். (வெ)

## உணவுற்பத்தியை அதிகரிக் ஏற்பாடு:

# வீட்டுத் தோட்டச் செய்கை: ஊக்குவிக்கத் திட்டம்

(புலோலி)
இலங்கையில் உள்ள சகல கிராமங்களிலும் உணவு உற்பத்தியை அதிகரிக்கு முகமாக வீட்டுத்தோட்டச்செய்கையை ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றினை விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் திரு. காமினி ஜயசூரிய நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இதற்கிணங்க யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்டவிவசாய உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். ஜெயரத்தினம் துரிதமாக மேற்கொண்டுள்ளார். யாழ். மாவட்டத்திலுள்ள இளம் விவசாயக் கழகங்கள் மூலம் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதில் யாழ். மாவட்ட விவசாய அலுவலர் திரு.வீ. மகேஸ்வரனும், யாழ். மாவட்ட இளம்விவசாயிகள்கழக விவசாயப் போதனாசிரியர் திரு. பீ. பொன்னையாவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சகல விவசாயப் போதனாசிரியர்களுக்கும் சுற்று நிருபங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதில் கோரப்பட்டுள்ள சில விஷயங்கள் வருமாறு:-

ஒவ்வொரு இளம் விவசாயக் கழக அங்கத்தவர்களும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடவேண்டும் இதனால் அவர்கள் பெறக்கூடிய வருமானம்பற்றியும் நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிப்பதுபற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கப்படவேண்டும்.

கழக சுற்றுப்பிரதேசத்திற்குள் இருக்கும் வளர்ந்த கமக்காரர்களையும் வீட்டுப்பெண்களையும், வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுத்துவதற்காக கழகஅங்கத்தவர்கள் வீடு வீடாகச்சென்று உற்சாகப்படுத்திவீட்டுத் தோட்டச் செய்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

வீட்டுத்தோட்டச் செய்கைக்குத் தேவையான மிளகாய், கத்தரி, தக்காளி, வாழை, தோடை, எலுமிச்சை போன்ற நாற்றுக்கள், வல்லாரை, கீரை, அகத்தி, பொன்னாங்காணி ஆகிய இலைப்பயிர்கள் மாவள்ளி, வத்தாளைத் துண்டங்கள் என்பவற்றை வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு இளம் விவசாயக் கழகங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## ''பலாத்கார ரீதியில் ஆட்சிபுரிவோரிடம்

# பலாத்காரத்தை நீக்குமாறே நாம் கோருகின்றோம்

## அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை!''

### அமிர் தரும் விளக்கம்

(கோண்டாவில்)
''லிபியாவில் நின்றும் நான் இடையில் திரும்பியதற்கான காரணம் ஒவ்வொரு தேர்தல்களின்போதும் எம் இனத்தவர்களுக்கும் எதிராக கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்செயல்களை கருத்தில்கொண்டு தான் நான் இரண்டு நாட்களுக்கு முன்னர் இலங்கை திரும்பாது இருந்தால் இன்னும் பல முக்கிய தலைவர்களைச் சந்தித்து இருப்பேன். நாம் எமது இனத்தின் விடுதலைக்காக பல துன்பத்தின் மத்தியில் உழைக்க சிலர் கூறுகின்றார்கள் சொகுசான வாழ்க்கை வாழ்வதாக லிபியாவிலும் நான் ஓர் அலுவலகத்தில் கடமையாற்றுவதைப் போன்றே இருந்தேன்.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா மண்டபத்தில் ''ஜனாதிபதி தேர்தலும் தமிழ் மக்களும்'' எனும் கருத்தரங்கு நல்லூர் தொகுதி விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

நான் வெளிநாடு சென்றதும் இங்கு சிலர் பிரசாரம் செய்தார்களாம் பயந்து ஓடி ஒடி ஒழித்துவிட்டதாக நான் யாருக்கும்பயப்படவோ அன்றி ஒழிக்கவோ போவதில்லை. ஜனாதிபதி தேர்தலில் கலந்து கொள்ளப்போவதும் இல்லை. பகிஸ்கரிக்கப்போவதாக ஒரு மாதத்திற்கு முன்னரே முடிவெடுத்து துண்டுப்பிரசுரங்களையும்கூட வெளியிட்டுள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் சிங்களமக்களின் தேர்தல் ஏன்றால் அப்படிப்பட்ட ஒருஜனாதிபதியுடன் ஏன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். இந்திய மக்களை பிரித்தானிய ஏகாதிபத்தியம் பலாத்காரமாக அடக்கியாண்டபொழுது இந்தியமக்கள் பாதிப்படைநத போதெல்லாம் காந்தியும் இந்திய தேசிய கரங்கிரசும் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் கதைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஒப்பந்தங்கள் செய்தன வட்டமேசைமகாநாடுகளைக் கூட நடாத்தின. இதன்மூலம் இந்திய விடுதலைப்போராட்டம் கைவிடப்பட்டதும் இல்லை பின் தள்ளப்பட்டதும்இல்லை. இதேபோன்றே எமது நடவடிக்கைகளும் இருக்கின்றன. இப்பேச்சுவார்த்தைகளை நம்மவர்கள் என்றமுறையில் நடாத்தவில்லை. பலாத்காரத்தின் மூலம் ஆட்சிசெய்யும் ஒருவன் என்ற முறையிலேயே பேச்சுவார்த்தையை நடாத்தினோம்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் 1972-ம் ஆண்டுகொண்டுவந்த அரசியல் அமைப்பையும் ஐக்கிய தேசியக்கட்சியினர் 1978ம் ஆண்டு கொண்டுவந்த அரசியல்அமைப்பையும் முற்று முழுதாகவே நிராகரித்துவிட்டோம். பலாத்காரரீதியாக எம்மை அடக்கியாளுபவர்களிடம் பலாத்காரத்தை நீக்கிவிடுங்கள் நான் இரண்டு கைகளிலும் முள் கொண்ட விலங்கு இடப்பட்டவனாக இருக்கின்றேன். இந்நிலையில் விலங்கைஉடைக்க முயற்சிக்கின்றேன். இதேநேரம் விலங்கில் உள்ள முள்ளை எடுத்து விடும்படிதான் கோருகின்றேன் இது தப்பான செயலாகுமா? நாடு விடுதலைபெற வேண்டும் என்று இந்தியாவில் போராட்டம் நடத்தியபோது இராணுவச்சட்டம் கொண்டு வரப்பட்டதனால் விடுதலைப் போராட்டம் நடத்தியவர்கள் இராணுவச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று தனிப் போராட்டம் ஒன்றே நடாத்தினர். இதே போன்று பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று பேசுவதில் என்ன தவறு? பெரியவிஷயங்களை சாதிக்கச் செல்லும்போது சிற்சில சிறு இடையூறுகள் ஏற்படும். அத்தகைய இடையூறுகள் யாவும் நீக்கப்படவேண்டும்,

இந்தியாவின் சுதந்திரத்தையே நோக்கமாகக் கொண்ட போராட்டம் நடத்திய இந்திய தேசிய காங்கிரஸ் 1935-ம் ஆண்டு மாநில சுயாட்சியையும் ஏற்றுக்கொண்டது. அதன் மூலம் இந்தியா சுதந்திரம் பெறவில்லையா? அன்றி கைவிடப்பட்டதா? காந்தி இந்திய தேசிய காங்கிரஸ் மூலம் எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டாரோ அதே போன்று நாமும் எமது பகுதியைக் காக்கவும் இனத்தைப் பாதுகாக்கவும், தொழில் வசதிக்காகவும் மண்ணில் உறுதியாக வாழவேண்டும் என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் மூலம் சில உரிமைகளைப் பெற்றுள்ளோம்.

''வெளிநாடு செல்வதற்கு இரண்டு நாட்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனிய நாட்டு தூதுவர் ஒருவரைச் சந்தித்தேன். அவரிடம் முப்பதைந்து வருடத்திற்கு பின்னர் ஏன் இத்தகைய ஒரு மாற்றம் என்று கேட்டபோது இஸ்ரேல் உலகில் நான்காவது இராணுவபடைப் பலம் கொண்ட நாடாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் சிரியா பின் வாங்கியுள்ளது. நாமும் சிறிது பின்வாங்கி ஒரு சிறிய இடத்தில் நிலையாக இருந்து அங்கிருந்து போராடுவது என்ற நிலைக்கு வந்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

தமிழ் ஈழ விடுதலையை பொறுத்தவகையில் உலக நாடுகள் சிலவற்றின் அனுதாபம் உண்டுடே தவிர அங்கீகாரம் கிடைக்கவில்லை. இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் அவர்கள் எமது கோரிக்கையை அங்கீகரித்தாலும் உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்கள். தமிழ்நாட்டு மக்களின் வேண்டுதலின்படி இந்தியா அனுதாபம் காட்டுகின்றதேதவிர அங்கீகரிக்கவில்லை. இத்தகைய நிலையில் தான் நாம் இருக்கின்றோம்.

எமது காலப்பகுதியில் ஐந்தரை ஆண்டுகள் சென்றுவிட்டன. நாம் எமது இயக்கத்தாக அமெரிக்கா முதல் இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் இன்னும் பல நாடுகளுக்கும் சென்று எமது மக்களின் பிரச்னைகளை எடுத்துக்கூறி அனுதாபத்தைப் பெற்றதுடன் ஆதரவும் பெறக்கூடிய சூழ்நிலையைக் கூட உருவாக்கி வருகின்றோம். நாம் வெளிநாடு சென்று ஜனாதிபதி பிரதமர் அல்லது முக்கிய அமைச்சர்களை யெல்லாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பாக இருப்பது எதிர்கட்சித் தலைவர் என்ற காரணமேயாகும்.

''பாராளுமன்றத்தையும் பகிஷ்கரிப்பார்களா? என்று திரு. குமார் கேட்கிறார். பாராளுமன்றத்தேர்தல் யார் தமிழ் மக்களைப் பிரதிநிதிப் படுத்துவது என்பது. அதை நாம் பகிஷ்கரிப்பதன் மூலம் கட்சிக்கு ஆட்சேர்க்கும் சிலர் அவ்விடங்களுக்கு துண்டு துண்டாகச் சென்று ''நாம் தான் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் நாம் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டே வாழ விரும்புகின்றோம், எமக்கு தமிழ் ஈழம் தேவையில்லை என்று கூறி விடுவார்கள். இதன் எதிரொலி எப்படி இருக்கும்.

''இருபது லட்சம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் ஒரே கட்சிக்கு வாக்களித்தல் தமிழராகிய தான் ஜனாதிபதியாக வரமுடியும் என்றும் திரு. குமார் கூறுகின்றார். இலங்கையின் மொத்த சனத்தொகை ஏறக்குறைய ஒரு கோடியே ஐம்பது லட்சமாக இருந்தால் அதில் எழுபது லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி உடையவர்களாக இருப்பர் இவர்களிலும் தமிழ் மக்கள் குறைவானவர்களே இருபத்தெட்டு லட்சம் தமிழ்மக்களில் மூன்று லட்சம் பேர் இந்தியப்பிரஜைகளாகபதிசெய்யப்பட்டு கப்பல் ஏறக் காத்திருக்கின்றார்கள். ஐந்து லட்சம் பேர் நாடற்றவர்களாக்கப்பட்டுள்ளனர் இந்நிலையில் வாக்களிக்கத் தகுதி உடையவர்களாக பத்து லட்சம் பேர்வரையிலேயே இருக்கின்றார்கள் இந்நிலையில் தமிழ்மக்களிடம் இருபது லட்சம் வாக்கு என்று பொய்களை கூறுகின்றார் குமார்

''தமிழ் மக்களின் பகுதியென்று கூறப்படும் வடக்கு கிழக்கில் இருந்த கடந்த மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் மொத்தமாக நான்கு லட்சத்து அறுபத்தென்றாயிரம் வாக்குகளே கிடைத்தன. இவற்றுள் தொலைந்த பத்துப்பெட்டிகளையும் கவனத்தில் கொண்டாலும் ஐந்து லட்சம் வாக்குகள் வரையே கிடைக்கப்பெற்றிருக்கும் தமிழ் ஈழத்திற்கு ஆணைகோருகின்றேன் என்கிறார் திரு. குமார் இவர் தனது பண்த்தில் ஒருபகுதியை அரசாங்கத்திற்கு நன்கொடை செய்துள்ளார் அதுவே நடந்திருக்கிறது. எனவும் குறிப்பிட்டார்.

# மன்னார் நகரில் நிழல் மரங்கள்

[மன்னார்]
மன்னார் லயன்ஸ் கழகத்தினால் மன்னார் நகர வீதியோரங்களில் நிழல் மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னோடியாக கடந்த சனிக்கிழமை மன்னார் கச்சேரி வீதியோரங்களில் மரங்கள் நாட்டப்பட்டன.

மன்னார் லயன்ஸ் கழகத்தின் நிழல் மரங்கள் நாட்டும் திட்டத்தின் கீழ் முதலாவது நிழல் மரத்தை மன்னார் அரசாங்க அதிபர் திரு டி. வாமதேவன் நாட்டிவைத்தார்.

நிழல் மரங்கள் நாட்டும் ஆரம்ப வைபவத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம் செபமாலை, சட்டத்தரணி யோன் தாசன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிதம்பரம் கோவில் காணிகளை சுவீகரிக்க வேண்டும்

## நல்லூர் எம். பி. பிரேரணை

(யாழ்ப்பாணம்)

'யாழ்ப்பாண மாவட்டத்தில் சிதம்பரம்கோவிலுக்கும், வேறு ரோவில்களுக்கும் தர்ம சாதனம் செய்ய பட்ட பல காணிகள் குறித்த நோக்கத்துக்காக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இக்காணிகளை சுவீகரித்து மாவட்ட அபிவிருத்தி சபைக்குத் தரவேண்டும்'' என்னும் பிரேரணை ஒன்றை தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம் பி, யுமான திரு. எம் சிவசிதம்பரம் யாழ் அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் கொண்டு வரவுள்ளார்.

இம்மாதம் 28ம் திகதி யாழ். செயலகத்தில் மாவட்ட அபி விருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா தலைமையில் நடை பெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட பிரேரணையைக் கொண்டு வருவதற்கு திரு. சிவசிதம்பரம் முன்றிவித்தல் கொடுத்துள்ளார்..

மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலாளர் இந்தக் காணிகளின் பட்டியலை உடனடியாகத் தயாரிக்க வேண்டுமென்றும். பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் காணி அமைச்சரை 'இக்காணிகளை சுவீகரித்து அபிவிருத்தி சபைக்கு தரும்படி கேட்டுக் கொள்வதாகவும்அப்பிரேரணையில் குறிப்பிட்டுள்ளது. (மா)

ஏழாலை கிராமிய வங்கி கொள்ளை

# குட்டிமணி உட்பட ஐவர் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஏழாலை கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கில் குட்டிமணி உட்பட ஐவர் மீது கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதவான் திரு சி. எல். ரி. மூனமலே முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், சரவணபெருமாள் யோகராசா, செல்லச்சாமி குமார் ஆகிய ஐவர் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்

நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டது சட்டத்தரணிகள் எம். சிவசிதம்பரம், எஸ். நவரத்தினம் ஆகியோர் எதிரிகள் சார்பில் ஆஜரானர்கள். 1977 செப்டம்பர் 25ந் திகதி 5 000ரூபாகொள்ளை முயற்சி சம்பந்தமாக இவ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதுகுட்டிமணிமீது சாட்டப்பட்டுள்ள ஐந்தாவது வழக்காகும்.

இந்த நீதிமன்றத்துக்கு வழக்கைநடாத்துவதற்கு நியாயாதிக்கம் உண்டா என்பது குறித்து பூர்வாங்கஆட்சேபனை எழுப்பவுள்ளதாகவும், எனவே குற்றவாளியா, சுற்றவாளியா என்று எதிரிகளைக் கேட்க வேண்டாமென்று சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டனர். இதனைஅடுத்து எதிரிகளிடம் எதுவும்கேட்கவில்லை.

நவம்பர் 4ந் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

# உப வரவு-செலவுத் திட்டம் நிறைவேறியது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகராட்சி மன்றத்தின் 82 ம் ஆண்டுக்கான உப வரவு செலவுத் திட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 14 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது

தமிழ்க்காங்கிரஸ் அணியின் தலைவர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் எதிர்த்து வாக்களித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினனர் 12 பேருடன் இரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் ஆதரித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். மாநகராட்சி பன்றத் தலைவர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் உப வரவு செலவுத்திட்டத்தை யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி.கெ. சிவஞானம் சமர்ப்பித்தார்.

டாக்டர் ஏபிரகாம் (தமிழ்க் காங்கிரஸ்), திரு தம்பு கந்தையா [த.வி. கூட்டணி] இருவரும் உப- வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை எதிர்த்துப் பேசியிருந்த போதிலும், தலைவர் வாக்கெடுப்புக்கு விடாமலே டாக்டர் ஏபிரகாமைத்தவிர. மற்றைய உறுப்பினர்கள் ஆதரிப்பதாகத் தெரிவித்தார். இதனை டாக்டர் ஏபிரகாம் ஆட்சேபிப்பதாகக் கூறினர். [மா]

"கோப்பாய்

# பொலிஸ்நிலையம் மீண்டும் இயங்க வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"மூடப்பட்ட கோப்பாய் பொலிஸ் நிலையத்தையும் புதிதூர் வங்கிக் கிளையையும் மீண்டும் திறக்க வேண்டும்'' என்று வலி கிழக்கு பிரதேச சபையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள், யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையினல் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இம்மாதம் 28ம் திகதி யாழ். செயலகத்தில் அபி விருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் குறித்து ஆராயப் படவுள்ளது. [மா]

# ஜீப் விபத்து

## 3 இராணுவத்தினர் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவஜீப் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூன்று இராணுவ வீரர்கள் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பியரத்ன [வயது 27] சாம்சன் (26 வயது), கமதிலகே [22 வயது] ஆகிய மூன்று இராணுவ வீரர்களுமே படுகாயமடைந்தவர்களாவர்.

கிளிநொச்சியில் இவ்விபத்து நடை பெற்றது. (மா)

"பொருளாதாரத்தை வளம்படுத்த

# சனத்தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த வேண்டும்"

[புலோலி]

''சனத்தொகை அதிகரிப்பே இன்று நாட்டில் உணவுப் பற்றுக் குறை வேலை இல்லாத்திண்டாட்டம் போன்றன அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் சிதைவடை ந்து மக்களின் வாழ்க்கை நலிவடையும் பேராபத்திற்குக் காரணமாகவிருக்கின்றது. எனவே சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது இன்றைய நிலையிலே மிகமுக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது,

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்பிரிவு உணவு போஷாக்குப்பயிற்ச்சி வகுபில் சனத்தொகைப் பிரச்சினையும் சிறிய குடும்பங்களால் ஏற்படக்கூடிய நன்மைகளும் என்னும் பொருள் பற்றி உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு, எஸ். சத்தியசீலன் குறிப்பிட்டார்.

இவ்உணவு போஷாக்குப் பயிற்சி வகுப்புக்கான சகல ஒழுங்குகளையும் பயிற்சி இணைப்பு அதிகாரி செல்வி புவனேஸ்வரி செல்லையா மேற்கொண்டிருந்தார் தொடர்ந்து உரையாற்றிய திரு. சத்தியசீலன் குறிப்பிட்டதாவது:

இன்றைய நிலையிலே உலக நாடுகள் முழுவதிலுமே சனத்தொகை அதிகரிப்பு பாரிய பிரச்னைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது' இச் சனத்தொகை அதிகரிப்பே உணவுப்பற்றுக்குறை வேலையில்லாத்திண்டாட்டம் மக்கள் நோயுடன் போராட வேண்டிய அவலநிலை என்பனவற்றை உருவாக்குகின்றது. சனத்தொகை வளர்ச்சி பெருக்கல் விருத்தியிலும் உற்பத்தி கூட்டல் விருத்தியிலுமே ஏற்பட்டுவருகின்றது. உற்பத்தியை இருமடங்கால் அதிகரிச்சச் செய்ய வேண்டும்.

விவசாய அபிவிருத்திகளை நாம் மேற்கொள்வதில் அதிக கவனமெடுக்க வேண்டும். விவசாய அபிவிருத்தி வரிவான பயிர்ச்செய்கை செறிந்த பயிர்ச்செய்கை என்ற இரு வழிகளாலுமே மேம்படுத்தப் படமுடியும்.

# தென் கோப்பாய் கூட்டணிக்கிளை

[நீர்வேலி)

கோப்பாய் தெற்கு கூட்டணிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கோப்பாய் எம், பி. மு ஆலாலசுந்தரம் அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிளையின் புதுவருட நிர்வாகிகள் வருமாறு தலைவர் திரு. செ.சபாரத்தினம், உபதலைவர் சி. தங்கராசா, செயலாளர் ஆ. சுப்பிரமணியம், உப செயலாளர் கு. செல்லையா, பொருளாளர் த. ஜெயரத்தினம்,

உறுப்பினர்கள் 10 பேர். [அ]

# தாயகம் திரும்பும் வழியில் காலன் வசமானுர்

(மன்ஞர்]

தாயகம் திரும்பவென ரயில் மார்க்கமாகதலைமன்னர் துறைமுகத்திற்கு வந்து கொண்டிருந்த தோட்டத்தொழிலாளி மன்னரில் மரணமானர்.

கப்பல் மார்க்கமாக தாயகம் திரும்பவென பண்டாரவளையிலிருந்து தனது குடும்பத்தாருடன் ரயிலில் வந்து கொண்டிருந்த மாரிமுத்து கந்தையா என்பவருக்கு வாந்தியும் நெஞ்சு வலியும் ஏற்பட்டது. இவர் உடனடியாக மன்னர் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு மரணமானர்.

இவரது மரணச் சடங்கிற்கான சகல ஏற்பாடுகளையும் தலைமன்னர் நலன்புரி அதிகாரி திரு. எம். சர்க்கரியார் தலைமையில்தலைமன்னர் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் மேற்கொண்டது. மரண மானவரின் குடும்பத்தினர் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நலன்புரி அதிகாரி திரு. சேவியர் பர்னந்து தலைமன்னர் இந்திய தூதரக அதிகாரி ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

## ஓமானில் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பது மட்டுமல்ல; அந்தப்பிராந்தியத்தில் சுதந்திரமான அயல் துறைக் கொள்கைகளைப் பின் பற்றும் நாடுகளை அச்சுறுத்துவதாகும்'' என்று அரபு வட்டாரங்கள் கருதுகின்றன.

''அமெரிக்கா, மிக முக்கிய இடங்களான மத்திய கிழக்கிலும் தூரகிழக்கிலும் தனது ராணுவத்திட்டங்களை நடைமுறையில் சோதித்துப்பார்க்க விரும்புகிறது. அந்தப் பிராந்தியத்திலும் அதையொட்டிய நாடுகளிலும் அமெரிக்க ராணுவத் தளங்கள் நிறுவப்பட்டுள்ளன. தியகோ கார்சியா தளம் நவீனப்படுத்தப்படுகிறது. ஓமான், சோமாலியா, கென்யா ஆகியவற்றின் தளங்களைப் பயன்படுத்தும் வசதியை அமெரிக்க ராணுவம் பெற்றுள்ளது. மத்திய கிழக்கிலும் தூரகிழக்கிலும் இராணுவ ஊடுருவல் மேன்மேலும் அதிகரிக்கிறது என்பதை அமெரிக்காவின் புதிய ராணுவத் திட்டங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன'' என்று அரபு வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.


இன்றே வாங்குங்கள்


ஹையோஸ்ரார் ரெலிவிஷன்

கொரியா (KOREA) நாட்டுத் தொழில் நுட்பத்தின் உயர்ந்த தயாரிப்பு !

ஈடிணையற்ற விசேஷ அம்சங்கள் பொருந்திய

★ ஹையோ ஸ்ரார் ரெலிவிஷன்

கறுப்பு / வெள்ளை



HYO STAR TELEVISION

(No. 1, KOREAN MAKE)

வடபகுதி விநியோகஸ்தர்கள்:

ஈஸ்வர் கோப்பறேசன்

18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே. எண். 23308

# கயரோக கொடிதினம்

[புலோலி]

இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்க வடமராட்சிக் கிளையின் கொடிதினம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கொடி தினத்தை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு, எஸ். இராசநாதனுக்கு முதலாவது கொடியை அணிவித்தும் சங்க வடமராட்சிக் கிளை தலைவர் திரு ஆ. க, மாணிக்கம் வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத்தலைவர் திரு சி. மு. கந்தசாமிக்கு இரண்டாவது கொடியை அணிவித்தும் ஆரம்பித்து வைத்தனர்.

வடமராட்சி தெற்குமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கொடி தினத்தை சங்கப் பொருளாளர் திரு. க. வயிரமுத்து வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஐயாத்துரைக்கு முதலாவது கொடியை அணிவித்தும், சங்கச் செயலாளர் திரு வீ. சேதுநாயகம் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவுபிரதேசசபைத் தலைவர் திரு என். பாஸ்கரனுக்கு இரண்டாவது கொடியை அணிவித்தும் ஆரம்பித்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகள். அலுவலகங்களில் இக்கொடிதினம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.


மனோகரா [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
16–20வரை
சிவாஜி–சரோஜாதேவி
பாகப்பிரிவினை



ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
போடியார்- மௌன கீதம் படம் பார்க்க கியூவில் நின்று விலா எலும்பு உடைஞ்சு போச்சு
தங்கம்மா- நாங்களும் பெண்களோடு கியூவில் நின்று நெருக்கத்தில் என்னைத்தள்ளிப்போட்டாங்களே.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்


## 50 கோடிமக்கள் பட்டினி

லண்டன், அக். 18

உலகில் 50 கோடி மக்கள் பட்டினியால் வாடுவதாக ஐ நா. ஸ்தாபனத்தின் உணவு நிபுணர் தெரிவித்துள்ளார். (வெ]

## சிறைத்தண்டனை

இஸ்லாமாபத், அக், 18

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியைக்கண்டித்து துண்டுப் பிரசுரம் வெளியிட்ள ஆறு அரசாங்க ஊழியர்களுக்கு 7வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட மக்கள் கட்சியைச் சேர்ந்த வர்களாவர். [வெ]


சில தினங்கள் மட்டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6–15.9–15
சனி, ஞாயிறு 2–30
கமலஹாசன்
ராஜபார்வை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனா
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு விசேட ஒழுங்குசெய்து தரப்படும்

ராணி (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6–00, 9–30
சிவாஜி-லக்ஷ்மி-முத்துராமன்-சிவகுமார்
ராஜராஜசோழன்
(கலர்–சினிமாஸ்கோப்)

வின்ஸர் (யாழ். நகர்) குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும் 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 6-00, 9-30.
A BRIDGE TOO FAR
(War Film)

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 10–30, 2–30
6–30, 9–30
ரஜனிகாந்த்-ரதி
முரட்டுக்காளை
[கலர்]

சாந்தி [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதைமாறிய பருவங்கள்


# "1972 அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழுக்கு தேசிய மொழிஅந்தஸ்து"

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவர் உறுதி

[ஏ. வி. மாணிக்கம்]

''1972ம் வருட அரசியலமைச்சட்டத்தை திரும்பவும் கொண்டுவரப்படும்போது அச்சட்டத்தில் தமிழ் – முஸ்லிம் மக்களுக்குரிய தேசிய மொழி அந்தஸ்தும் இருக்கக்கூடியதான திருத்தங்கள் முக்கிய இடம்பெறும்'' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவர்களுள் ஒருவரும் முன்னாள் நீதிபதியுமான திரு. ஜெயபத்திரான, பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவுப்பகுதி அமைப்பாளர் சட்டத்தரணி பி. கதிரவேலுவின் இல்லத்தில் இப்பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரித்து நடைபெறும் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு திரு. ஜெயபத்திரான நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

இம்மகாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மற்றைய உபதலைவரான திரு. கே. சண்முகலிங்கம், யாழ் தொகுதி அமைப்பாளர் திரு. குமாரசாமி விநோதன், வடபிரதேச இணைப்புச் செயலாளரும், மானிப்பாய் தொகுதி அமைப்பாளருமான திரு எஸ். சிவஞானம், தீவுப்பகுதி அமைப்பாளர் சட்டத்தரணி ப. கதிரவேலு, முன்னாள் எம். பி. திரு எம். சி. சுப்பிரமணியம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

### தமிழ்மொழிக்கு தேசிய அந்தஸ்து

திரு. ஜெயபத்திரான மேலும் தெரிவிக்கையில் தமிழ் மொழிக்கு தேசிய மொழி அந்தஸ்து வடக்கு–கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக தமிழ், நீதிமன்றங்களில் தமிழிலும் வழக்காடும் உரிமை ஆகியன கொண்டுவரப்படும் 1972ம் ஆண்டுச்சட்டத்தில் புகுத்தப்படும் என்று சொன்னார்.

''ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியவர்யாராக இருந்தாலும் 3வது அரசியலமைப்புத்திருச் சட்டத்தின்படி ஒரு உயர் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் பதிய ஜனாதிபதியாகசத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டு உத்தியோக பூர்வமாக தமது கடமை ஏற்றுக் கொள்ளலாம்'' என்று குறிப்பிட்ட திரு. ஜெயபத்திரான, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் யார் என்பதை அறிவிப்பது தேர்தலை ஆணையாளரே ஒளிய இப்போதிருக்கும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அல்ல என்றார்.

### ஜே. ஆரே தடையாக இருந்தார்

திரு. ஜெயபத்திரான மேலும் தெரிவித்ததாவது:

''பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தடையாக இருந்தவர் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெவர்த்தன. இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயலாளராக இருந்த பொழுது (1980 ஆகஸ்ட் 30 ம் திகதி) விக்டோரியாப்பூங்காவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில், ''பண்டா—செல்வா ஒப்பந்தத்தை திரு. பண்டாரநாயக்கா அமுல் படுத்துவாரானால், ஐக்கிய தேசியக்கட்சி சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்னதுடன் மாத்திரம் நிற்கவில்லை. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்குப் பாதயாத்திரை ஒன்றையும் மேற்கொண்டார்.

ஒரு நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை இன மக்களின் பிரச்னைகள் தீரவேண்டுமானால் உண்மையான சோஷலிச ஆட்சி உருவாக வேண்டும்; முதலாளித்துவ ஆட்சியாளரால் இப் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது.

''தமிழ்–சிங்கள மக்களின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து பேச்சுவார்த்தை நடாத்துவதாலும் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. பொது மக்கள் இணைந்து உறவாடுவதன் மூலம்தான் சிறுபான்மை இன மக்களிடையேயே சுமுகமான நிலை ஏற்படும். [மா]

## சாதாரண

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திரிவதைப் பார்த்துப் பாடினார்.

கவிஞர்கள், காதலர்கள், பித்துப்பிடித்தவர்கள் எல்லோரும் ஒரு நிலையினரே.

பாரதியைப் போல் சரிசமமான கவிஞர் ஒருவர் ஐரோப்பாவிலும் இருந்தார். அவரது பெயர் பயறஸ்.

இவரும் பாரதியைப்போல் சிறுவயதிலேயே கவிதைகளைப் பாடினார். ஆங்கிலக் கவிஞரான இவர் சிறுவயதிலேயே தந்தையை இழந்தார்.

பாரதி கவிதைபாடிய காலங்களை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம். இதில் மத்திய பகுதி காலத்தில் இயற்றிய பாடல்களே உயர்ந்த இடத்தைப் பெற்றன.

இவ்வாறு ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளார்கள்.

பாரதி முதலில் தனது தாய் நாட்டிற்கும், தமிழ் நாட்டிற்கும் வணக்கம் செலுத்திப் பாடினார். தமிழ் மொழிபற்றி தனியானதோர் பகுதியில் பாடினார்.

பாரதியார் பல மொழிகளைக் கற்றறிந்தவர். அதனால்தான் யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல் இனிதாதனது ஒன்றுமில்லையென்றார்.

இதனால் தான் தமிழ் மொழி இனிய மொழி என எல்லோரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமது சொந்த மண்ணில் மக்கள் பறவைகள் போல் சுதந்திரமாக வாழவும், அடிமை விலங்கினை உடைத்தெறியவும் பல சுதந்திரப் பாடல்களைப் பாடினார்.

பாரதியாரின் பாடல்களில் 'பாஞ்சாலி சபதம்' பாடல் மிகச் சிறந்த பாடலாகும்.

குழந்தைகளுக்காக 'ஓடிவிளையாடு பாப்பா' என்ற பாடலைப் பாடி இப்பாடல்மூலம் குழந்தைகளுக்கு நல்லறிவைக் கொடுத்தார்.

ஒரு மனிதனுக்கு இறை பக்தி, சரீர சுகம், கல்வி என்பன அவசியம். இவற்றை ஓடி விளையாடு பாப்பா என்ற பாடல் மூலம் உணர்த்தியுள்ளார்.

இவ்வளவு பெருமைவாய்ந்த பாரதிக்கு தமிழ்நாடு தகுந்த மரியாதை செய்யவில்லை. இதனால் தமிழ் மக்களாகிய நாம் தலைகுனிகிறோம். பாரதியின் சேவை பாராட்டப்படவில்லை.

இப்போதுதான் கிராமப் புறங்களிலும், பட்டினப்புறங்களிலும் பாரதிக்கு விழா எடுக்கப்படுகிறது.

மற்றும் பலர் பேசினர்.

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 2-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(19—10—82)

மேடம்: ருசிகரமான சம்பவங்கள்இடம் பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். சாஸ்திரவழியால் இலாபம் கிடைக்கலாம்.

இடபம்: தென்றலும்தியாக மாறும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம். உணவு விடயத்தில் அதிக கவனஞ் செலுத்தவும்.

மிதுனம்: தேனான சம்பவங்கள் இடம் பெறும். தேடியது கிடைக்கும். காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான தினம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்

கடகம்: திருப்திகரமான மாற்றங்கட்கும் இடமுண்டு, நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கை மூலம் பணலாபத்தையும் தேடிக்கொள்வீர்கள்.

சிங்கம்: மதிப்பு உயரும். இல்லத்தில் இனிமை தழுவும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எவ்வித சிக்கலான பிரச்னைகளையும் பேச்சுவன்மையால் சமாளித்து விடுவீர்கள்.

கன்னி: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவுகொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லைகளும் அதிகரிக்கும்.

துலாம்: ஆத்திரப் போக்கால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். வேண்டியவர்களைப் பகைத்துக் கொள்ளவும்ஏற்படும். மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளவும்

விருச்சிகம்: வார்த்தைசாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளருக்கு சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவும் பெருகும்.

தனுசு: முன்னேற்றப்பாதையில் தடைகள் தென்படுகின்றன. தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு.

மகரம்: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்குவரும். தாய்வழிப் பெருமையும் உண்டு. வாகன நலத்துடன் வாழ்விலும் சுகம் காணும்.

கும்பம்: வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகிறது. அமைதியான நடவடிக்கைகள் மூலம் மற்றவர்களின் நட்பைப் பெறுவீர்கள். வீட்டிலும் மதிப்பு உயரும்.

மீனம்: எதிர்பார்த்த முடிவுகள் ஏமாற்றத்தை தரலாம். எதிரிகள் சூழ்ச்சி பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும்,

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 'இலட்சியக் கவிஞன்''

[யாழ்ப்பாணம்)

''பாரதி சாதாரண ஒரு கவிஞன் அல்ல அவர் ஒரு இலட்சியக்கவிஞர். மகாகவிஞர் அவர் கூலிக்கு மாரடிக்கும் கவிஞனாக இருந்திருந்தால் பெரும் வசதி படைத்தவராக இருந்திருப்பார். ஆனால் இலட்சியக் கவிஞராகவாழ்ந்ததால் தான்இன்று உலகம் போற்றும் 'கவியாக' இனமத பேதமற்று யாவரும் போற்றி புகழ்ந்து கொண்டாடும் கவிஞராக திகழ்கின்றார்.''

என்று ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், நெடுந்தீவு தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் கழக ஆதரவில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார் நெடுந்தீவு தேசிய இளைஞர் சேவை மன்ற கழகத் தலைவர் திரு. ஐ. தேவராசன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

# நாட்டில் முதல்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெற்றாலும்கூட தேர்தல் ஆட்சேப வழக்கொன்றின் போது இந்தப்பிரச்னை கிளப்பப்பட்டு அவரது வெற்றி செல்லுபடியாகாமல் போகலாம் என்றவகையில் சமசமாஜக்கட்சியின் வேட்பாளரான டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளரான திரு.கொப்பேகடுவவுக்கு எதிராக ஒருபிரச்னையைக் கிளப்பிவிட்டிருக்கிறார்.

இந்தப்பிரச்னை பற்றி அலட்டிக்கொள்ளத் தேவையில்லை யென்று திரு. கொப்பேகடுவ அசட்டைசெய்துவிட்டார்.

ஒருகட்சியென்றால் அதற்கு தலைவர் ஒருவர் இருக்கவே செய்வார். தேர்தலில்போட்டியிடும் வேட்பாளரின் தகுதியைத்தான் மக்கள் கவனிக்க வேண்டுமேயன்றி அவர் சார்ந்துள்ள கட்சியின் தலைவரைப் பற்றியல்லவென்று சிலர் வாதிக்கிறார்கள்.

இக் கருத்து செறிவில்லாத வாதம்.

ஒருகட்சியும், அதன்தகுதியும் தலைவரின் தகுதியையும் திறமையையும் கொண்டே பெரும்பாலும் கணிக்கப்படுகின்றது.

மேலும் திரு. கொப்பேகடுவ இத்தேர்தலில் போட்டியிடுவதின் முக்கிய நோக்கம் தமது கட்சித் தலைவரின் இழந்த உரிமைகளை மீட்டுக்கொள்வதாகும்.

திரு. கொப்பேகடுவ வெற்றி பெற்று தேர்தல் வழக்கு நடைபெற்றால் டாக்டர் கொல்வின அவர்சார்பில் நீதிமன்றத்தில் வாதிடக்கூடும்!

இன்னொரு விஷயம்பற்றியும் அரசியல் வட்டாரங்களில் தீவிரமாக விவாதிக்கப்படுகின்றது. குடியியல் உரிமையை இழந்தவரின் பெயரை அல்லது அவர் சம்பந்தப்பட்ட விவகாரத்தை தேர்தல் பிரசாரமாகப் பயன்படுத்துவது செல்லுபடியாகுமா என்பதே அந்தவிடயம்.

## அரசபத்திரிகைகளின் போக்கு

தேர்தல் பிரசாரத்தில் சட்டசிக்கல்களில் மாட்டிக்கொள்ளாமலிருப்பதில் ஐக்கியதேசியக்கட்சியினர் மிகவும் கவனமாக இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

அரசகூட்டுத்தாபனமான ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தேர்தல் பிரசாரப் பேச்சுக்கள் பற்றியும், அவரது சூறாவளிசுற்றுப் பிரயாணங்கள் பற்றியும் செய்திகள் வெளியிடுவதைக் கட்டு படுத்திக் கொண்டுள்ளது,

தமிழ்பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் நோக்குடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள திரு. குமார் பொன்னம்பலம் ஈழக்கிலங்கையில் தமது தீவிர பிரசாரங்களின் மூலம் தாம் எதிர்பார்த்த அளவுக்கு அங்கு தமது நிலை குறித்து ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பார் போல் தோன்றுகின்றது. கிழக்கிலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களில் சிலரும் கூட திரு. குமார் பொன்னம்பலத்துக்கு சாதகமாக கருத்து வெளிபிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

திரு. பொன்னம்பலம் கோருவதுபோல் தமிழ் மக்கள் தமிழ் ஈழ விடுதலைக்கான அவரது கருத்துக்கு செவிசாய்த்து வாக்களிப்பார்களானால் தமிழ் ஈழம் கோரும் ஏனைய இயக்கங்கள் கடைகளைக் கட்டிக் கொண்டு புறப்பட்டு விடவேண்டும்.

ஆனால் அரசின் ஆதிக்கத்திலுள்ள பத்திரிகைகள் ஐ. தே. கட்சியின் வேட்பாளருக்கு சப்பைக்கட்டு கட்டுகின்றன. எல்லா வேட்பாளருக்குமே சம விளம்பரம் கொடுப்பது போல் காட்டப்பட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே இந்தப்பத்திரிகைகளில் அதிக பிரசாரம் கிடைக்கின்றது.

ஐ. தே. கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றால் இதுவும் கூட ஒரு தேர்தல் ஆட்சேபனையாக கிளப்பப்படுவது சாத்தியம்.

## கிழக்கில் குமார்

அந்த நிலையில் தமிழ் மக்களின் ஏகத்தலைவர் என்ற நிலைக்கு திரு. குமார் பொன்னம்பலம் உயர்ந்து விடுவார். அவர் கூறியிருப்பது போல தமிழீழ அரசியல் நிர்ணயசபையை அவர் கூட்டவும் கூடும். ஆனால் தமிழ் மக்கள் அவரைப்புறக் கணித்துவிட்டு வேறு வகையில் வாக்களிப்பார்களானால் தமிழ் ஈழவிடுதலையை அவர்கள் விரும்பவில்லையென்று அரசாங்கமும் ஏனையகட்சிகளும் பிரசாரம் செய்யவாய்ப்பேற்படும், தமிழ்மக்களில் 50 வீதத்துக்கும் குறைவானவர்களே அவருக்குவாக்களிக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும் தமிழ் ஈழக்கோரிக்கையை அவர்கள் கைவிட்டு விட்டார்கள் என்ற முடிவுக்கு வருவது சாத்தியமாகுமா?

இந்த நிலையைத் தவிர்க்க தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் தேர்தலில் பங்கேற்பதில்லை யென்ற நிலை உதவுமா என்பது தெரியவில்லை.

தேர்தல் பிரசாரக்கூட்டங்களை மக்கள் சென்று பார்க்கும் அளவில் 'பகிஷ்கரிப்பு' பங்கு கொள்வதில்லை என்ற நிலைப்பாடுகளை தமிழ் மக்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொண்டு விட்டதற்கான அறிகுறியைக் காணோம்.

நாட்டில் முதல் தடவையாக நடைபெறும் முழுநாட்டுக்குமான ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் இத் தேர்தலில் அவர்கள் தம் நிலைகளுக்கும் எதிர்கால சந்ததியின் நலன்களுக்கும் உகந்தவகையில் தம்பங்களிப்பை செலுத்தத்தவறமாட்டார்கள் என்று நம்பலாம்,

# 'நாளை நமதே' என்கிறார் ஹெக்டர்

(கொழும்பு)

''எந்தப் பகுதிக்குப் போனாலும், மக்கள் வெள்ளத்தையும், அவர்கள் அன்பையும் ஆதரவையும் கண்டு பிரமித்துப் போகிறேன். 'நாளை நமதே' என்பதை என்னுள்ளம் உணர்த்துகிறது! யாழ்ப்பாணத்தில் 70 வீத மக்கள் எம்மை ஆதரிக்கின்றனர். முஸ்லிம்மக்கள் 65 வீத மானவர்கள் ஆதரிக்கின்றனர். சிங்கள மக்கள் 70 வீதத்தினர் ஆதரிக்கின்றனர். இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்க்கும்போது, முப்பத்தைந்து லட்சம் மக்களின் வாக்குகளைப்பெற்று நான் ஜனாதிபதியாவேன்'' என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ ஆமர்வீதிச் சந்தியில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு கொப்பேகடுவ தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

''தோல்வியைப்பற்றிஏதோ பெரிதாக ஜே. ஆர். பிதற்றுகிறார். களனித் தேர்தலில் 1956ஆம் ஆண்டு, அவர் மண்கவ்வியதை மறந்துவிட்டாரா? சுமார் 22,000 வாக்குகளால் அவர் அப்போதுதோற்றார். தனது பேச்சால் தன்னையே மக்களிடமிருந்து தூரவிலக்கிக் கொள்கிறார். இம்மாதம் 20ந் திகதி என்ன நடக்கப்போகிறது என்பதை இப்போதே சொல்லிக்கொள்கிறேன்.

''தனது தேர்தல் படத்தை ஜே. ஆர். பத்துவருடத்துக்கு சுருட்டிவைக்கும்படி சொல்லிக்கொள்கிறேன்.

''வேலையற்றோருக்கு விசேட உதவிகளை நாம் வழங்குவோம். சகல வயோதிபர்களுக்கும் பென்ஷன் வழங்குவோம்.

''ஏழை மக்களின் தரத்தை உயர்த்துவோம்.



வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்ஸ் நேற்றுக் காலை யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில், அகில இலங்கை ரீதியிலான சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபோது எடுத்த படம்.

''தமிழ் ஈழத்திற்கான

# சர்வஜன வாக்கெடுப்பாகவே ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்துகிறேன்''

## — குமார்

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ஈழக் கொள்கையை முன்வைத்து தமிழ் மக்களின் சார்பாகவே நான் இந்தஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன். எந்தவொரு தமிழ் மகனும் போட்டியிட முன்வராத பட்சத்திலேயே நான் இத் தேர்தலில்போட்டியிடுவதென தீர்மானித்தேன். குட்டிமணியை ஜனாதிபதித் தேர்தலில் போட்டிக்கு நிறுத்தினால் நான்போட்டியிலிருந்து வாபஸ் பெறுவதாகவும் அறிவித்திருந்தேன்.''

இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு குமார் பொன்பலம் யாழ் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் சட்டத்தரணி எஸ்.ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் ஈழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பாகவே நான் இந்த ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்துகின்றேன். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியில் வாழும் தமிழ்மக்களின் ஆணையை தமிழ் ஈழ இலட்சியத்திற்குப் பெறுவதற்காகவே இத்தேர்தலில் நிற்கிறேன். இதன்மூலம் அவர்களும் தமிழ்ஈழக்கொள்கையை ஆதரிக்கிறார்கள் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்ட முடியும்.

''எனது இந்த லட்சியத்திற்கு ஆதரவளிக்கும்படி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திடமும், இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமானிடமும் கேட்டேன். அவர்கள் அதற்கு மறுத்துவிட்டார்கள். 'குட்டிமணி'யை தமிழரசுக்கட்சி சார்பில் இத்தேர்தலில் வேட்பாளராக நிறுத்தும்படி திரு. சந்திரகாசனிடம் கேட்டேன். அவரும் அதற்கு மறுத்துவிட்டார்.

''தமிழ்ஈழ லட்சியத்தை தமிழ்மக்கள் தொடர்ந்தும் ஆதரித்து வருகிறார்கள் என்பதை உலகநாடுகளுக்கு உணர்த்துவதற்குமாகவே இத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

''போர்என்றால்போர், சமாதானம் என்றால் சமாதானம்'' என்றுகூறியதிரு ஜே ஆர் ஜெயவர்த்தனவிற்கு ஒரு பாடம் புகட்டுவதற்குமாகவே இத் தேர்தலில் நிற்கிறேன். ஒரு தமிழ் மகன் என்ற ரீதியில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை எனக்கு அளிக்கவேண்டும்.

''ஐ. தே. கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் தமிழ் மக்கள் வாக்களிப்பதனால் எந்தவிதமான நன்மையும் ஏற்படாது. ஐ தே. கட்சியின் ஆட்சிக்காலத்திலேயே தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமான யாழ். பொதுசன நூல் நிலையமும், 97,000 நூல்களும், மற்றும் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது ஒன்பது தமிழர்கள் கொலை யெய்யப்பட்டார்கள். இந்த ஆட்சிக்காலத்திலேயே தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் தரப்படுத்தல்முறை கொண்டுவரப்பட்டது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் பொருட்டு 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது'' என்றார்.

இக்கூட்டத்தில் திரு ஆனந்தராஜா, திரு. முருகேசு, திரு. தங்கராசா, திரு மோதிலால் நேரு, திரு. மகேந்திரராஜா' திரு. முதலியார் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

(மா—வெ)

## வானொலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மான புதன்கிழமை இருபதாம் திகதியும் வியாழக்கிழமை இருபத்தோராந் திகதியும் இரவு முழுவதும் வானொலியும், ரூபவாஹினியும் தொடர்ந்து இயங்கும் என்றும்,முதல் முடிவு அநேகமாக வியாழக்கிழமை அதிகாலை ஐந்துமணிக்கு வெளியாகும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது

## தடையான. ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூரண விடுதலையை ஆயுதப் போராட்டமூலம் மாத்திரமே வென்றெடுக்கலாம் என்பதில் நாம் திடமான நம்பிக்கை கொண்டுள்ளோம்'' என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## செல்லப்பா இராசதுரை

நல்லூரைச் சேர்ந்த செ. இராசதுரை காலமாகிவிட்டார். இவர் யாழ்ப்பாணம் அரசாங்க வைத்திய சாலை ஊழியரும், காலஞ்சென்ற செல்லப்பாவினதும், நாகமுத்துவினதும் ஏகபுத்திரனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), ஸ்ரீகுமார், ஸ்ரீரஞ்சன் ஆகியோரது அன்புத் தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (19-10-82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லூர், 4/1, மூத்தவிநாயகர் ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றாரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

4879

# மரண அறிவித்தல்

## இளையதம்பி கோபாலசிங்கம் J. P.

(சட்டத்தரணி—நொத்தாரிஸ்)

யாழ்ப்பாணம் நக்கா வீதி 13-ம் இலக்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி இளையதம்பி கோபாலசிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும். பிரியதர்ஷினி, விஜயதர்ஷினி சுவர்ணதேவி, ரஞ்சினிதேவி, சிவயோகினி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஸ்ரீசண்முகநாதன் [குவைத்], கனகலிங்கம் [கட்டிட ஒப்பந்தக்காரர்), பாலச்சந்திரன் [மின்சாரசபை,கொழும்பு],உலகநாதன் [உரிமையாளர் பிறிலியன்ற் நகைமாளிகை, யாழ்ப்பாணம்], ஹரிகரன் (லண்டன்] ஆகியோரின் மாமனாருமாவார்.

நாளை 20-10-82 புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் காலை 10-00மணிக்குத் தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 4875]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.